

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2025) விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு கலைஞர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே. நவாஸ்கனி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், எஸ்.தங்கபாண்டியன், ஜி.அசோகன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2025) விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 400 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கே. நவாஸ்கனி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், எஸ்.தங்கபாண்டியன், ஜி.அசோகன், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம், மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முழுவதும் பயனாளிகளுக்கு

# நான்கரை ஆண்டுகளில் 19 லட்சம் பட்டா வழங்கி திராவிட மாடல் அரசு சாதனை!

## விருதுநகரில் நடைபெற்ற அரசு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**விருதுநகர், செப்.24-**

**விருதுநகரில் நடைபெற்ற அரசு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு, 837 பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டா, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஆணைகள் என ரூ.10.84 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை நேற்று வழங்கினார். இதனைத் தொடர்ந்து, ரூ.25.88 கோடி மதிப்பில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.124.57 கோடி மதிப்பில் புதிய பணிகளுக்கான அடிக்கல் நாட்டினார்.**

**அப்போது அவர் ``நம் திராவிட மாடல் அரசு மக்களுக்கு மென்மேலும் திட்டங்களைத் தந்திட தொடர்ந்து ஆதரவு தர வேண்டும்" எனப் பயனாளிகளைக் கேட்டுக்கொண்டு, அவர்களை வாழ்த்திப் பேசினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

இன்று விருதுநகர் மாவட்டத்துக்கு வருகை தந்து, 840 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா உள்ளிட்ட 162 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். இந்த விழாவை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்ட அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கும், தங்கம் தென்னரசு அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியாளர்களுக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் முதலில் என் பாராட்டுகளையும், வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கூடுதல் சிறப்பு!**

நம் முதலமைச்சரின் திராவிட மாடல் அரசின் வெற்றிக்கு உங்கள் ஒவ்வொருவரின் முகத்தில் தெரிகின்ற சிரிப்பும், மகிழ்ச்சியுமே ஒரு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டில் எத்தனையோ ஊர்களுக்குச் சென்று, எத்தனையோ பேர்களுக்கு பட்டா கொடுத்தாலும், இன்றைக்கு விருதுநகர் மாவட்டத்துக்கு வந்து, விருதுநகர் மக்களுக்கு பட்டா கொடுப்பது கூடுதல் சிறப்பு. அதற்கு என்ன காரணம் என்று உங்களுக்கு தெரிந்திருக்கும். மற்ற மாவட்டங்களில் பட்டா கொடுக்கிறோம் என்றால், அந்த பட்டாக்கள் கொடுப்பதற்கு காரணமாக இருப்பவர், உங்கள் மாவட்ட அமைச்சர் அண்ணன் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கே பட்டா கொடுக்கிறார் அவர். அவர் பொறுப்பு வகிக்கின்ற வருவாய்த் துறை மூலமாகத்தான் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் பட்டாக்கள் கொடுக்கப்படுகின்றன. இன்றைக்கு அவர் மாவட்டத்துக்கு நான் வந்து பட்டா கொடுப்பதற்கான வாய்ப்பை கொடுத்தமைக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நலத்திட்ட உதவிகள்!**

இன்னொரு கூடுதல் சிறப்பும் இந்த மாவட்டத்துக்கு உண்டு. தமிழ்நாட்டில் எந்த அமைச்சராக இருந்தாலும் சரி, எந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றாலும் அனுமதி கேட்டு நிற்க வேண்டியது உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த நிதியமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களிடம்தான். ஏனென்றால், அண்ணன்தான் அனைத்து திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கி தருபவர். ஒருபக்கம் நிதி கொடுக்கின்ற அமைச்சர், இன்னொரு பக்கம் நிலம் கொடுக்கின்ற அமைச்சர் என்று, இரண்டு முக்கிய அமைச்சர்களால் விருதுநகர் மாவட்டம் பல மடங்கு வளர்ந்து நிற்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு நலத்திட்ட உதவிகளை கொடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

முக்கியமாக இங்கு ஆதிதிராவிடர் மக்களுக்கு சுமார் 300 பட்டாக்கள், நீண்ட நாள் பட்டாக்களுக்குக் கோரிக்கை வைத்த 100 பேர் சேர்த்து, 400 பேருக்கு பட்டாக்களை வழங்க இருக்கிறோம். குறிப்பாக நம் அரசு அமைந்த பிறகு நம் முதலமைச்சரின் உத்தரவுக்கு இணங்க, தமிழ்நாடு முழுவதும் இந்த நான்கரை வருடத்தில் 19 லட்சம் பட்டாக்களை நம் அரசு வழங்கி இருக்கிறது. இது மிகப்பெரிய சாதனை. பட்டா என்பது, நீங்கள் குடியிருக்கும் இடத்திற்கான, சட்டப்பூர்வமான உரிமை.

**பலநாள் கனவு!**

நீங்கள் பலநாள் பட்டா வேண்டும் என்று அரசு அலுவலகங்களுக்குச் சென்று காத்துக்கொண்டு இருந்திருப்பீர்கள். ஆனால், இன்றைக்கு அமைச்சர்கள், அதே அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உங்களைத்தேடி வந்து உங்களுக்கான பட்டாக்களை கொடுத்திருக்கிறோம். பட்டா என்கிற உங்களின் பலநாள் கனவு, நம் முதலமைச்சரால் நனவாக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

இனி, உங்கள் வீட்டில் நிம்மதியாக, மகிழ்ச்சியாக தூங்கலாம். உங்களின பல வருட பயத்தையும், பதற்றத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியாக மாற்றி காட்டியிருக்கிறார். ஏனென்றால், இந்தக் காலத்தில் எங்கு சென்றாலும், அவர்கள் முதலில் கேட்கும் கேள்வி. உங்கள் வீடு எங்கே, உனக்கு இருக்க இடம் இருக்கிறதா, வீட்டுக்கு முதலில் பட்டா இருக்கிறதா என்றுதான் கேட்பார்கள். வங்கிகளுக்குச் சென்று கடன் கேட்டாலும், திருமணத்துக்குப் பெண் கேட்டாலும் முதலில் வீடு, பட்டா இருக்கிறதா என்றுதான் கேட்பார்கள். அந்த அளவுக்கு இடம் என்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் அவசியமான ஒன்று. அந்த வகையில், உங்களுக்கான அத்தியாவசிய தேவையை, இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்து கொடுத்திருக்கிறார்.

இங்கு பட்டா மட்டும் கொடுக்கவில்லை. பட்டா இருக்கக்கூடியவர் வீடு கட்டுவதற்கு கலைஞர் கனவு இல்லத்திற்கான ஆணையையும் நம் அரசு கொடுத்திருக்கிறது. நம் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு 3 கோடியே 13 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்புகளையும் இந்த மேடையில் கொடுத்துள்ளோம்.

**சுயஉதவிக் குழுக்கள்!**

தமிழ்நாட்டுக்கு எத்தனையோ பெருமைகள் இருந்தாலும், நான் எந்த மாவட்டத்துக்குச் சென்றாலும், தமிழ்நாட்டின் பெருமையாக, அங்கீகாரமாக நம் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளைத்தான் எப்போதும் பெருமையாக சொல்வேன். அதனால்தான் எந்த ஊருக்கு சென்றாலும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளைச் சந்தித்துப் பேசுவேன். அவர்களின் செயல்பாடுகளைப் பற்றி தெரிந்து கொள்வேன். அவர்களின் கோரிக்கைகளை அறிந்து அவற்றைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் என்று, நம் முதலமைச்சர் அவர்கள் எனக்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

சமீபத்தில், சென்ற வாரம் சேலத்துக்குச் சென்றேன். அங்கு தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற குழுக்களுக்கு 3 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை அங்கு இருக்கின்ற சகோதரிகளுக்கு வழங்கினோம்.

நம் தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன் முறையாக, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டைகளை, சென்ற வாரம் நாம் கொடுக்க ஆரம்பித்துள்ளோம். இது இந்தியாவிலேயே முன்மாதிரியான திட்டம். அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு விருதுநகரில் வங்கிக்கடன் இணைப்புகளை கொடுத்துள்ளோம். விரைவில் சுயஉதவிக் குழுக்களில் உள்ள அனைத்து சகோதரிகளுக்கும் உங்கள் பெயர், குழுவின் பெயர், புகைப்படம், முகவரியோடு அடையாள அட்டை வழங்கப்படும். அந்த அடையாள அட்டையை தயவுசெய்து பத்திரமாக பாதுகாக்க வேண்டும். அதை நீங்கள் பயன்படுத்த வேண்டும். அதில் பல்வேறு நலத்திட்டங்கள் இருக்கிறது. நம் முதலமைச்சர் எடுத்த முயற்சியால்தான் முதன்முறையாக சுயஉதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டையைக் கொடுத்துள்ளோம்.

**உழைப்பின் நம்பிக்கை!**

இவற்றையெல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு கொடுக்கின்ற கடன் தொகையான பார்க்கவில்லை. சுயஉதவிக் குழு சகோதரிகள் உங்கள் உழைப்பின் மீது இருக்கின்ற நம்பிக்கையாகத்தான் பார்த்து இதையெல்லாம் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

இந்தக் கடன் உதவியைப் பெறுகின்ற நீங்கள், நாளை சிறப்பான தொழில் செய்து, தொழில்முனைவோராக நான்கு பேருக்கு வேலை கொடுக்க வேண்டும். அந்த அளவுக்கு உங்களைத் தயார்படுத்தி, முன்னேற்றிக்கொள்ள வேண்டும். அந்த நிலைமைக்கு நீங்கள் வர வேண்டும் என்று உங்களை வாழ்த்துகிறேன். இந்த நிகழ்ச்சியில் நிறைய மகளிர் கலந்து கொண்டுள்ளீர்கள். உங்களுக்கு என் பாராட்டுகள், வாழ்த்துகள். இந்த அரசே மகளிருக்கான அரசாக நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார். இந்த நான்கு வருடத்தில் மகளிர் முன்னேற்றத்துக்கு எண்ணற்ற திட்டங்களை, நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு மகளிர் விடியல் பயணம் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், காலை உணவுத் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள்.

**ரூ. 125 கோடியில் திட்டங்கள்!**

இந்த மேடையில், விருதுநகர் மாவட்டத்தில் 26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற ஐந்து திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்துள்ளோம். 125 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டங்களை உருவாக்க அடிக்கல் நாட்டியுள்ளோம். இதுபோன்று ஒவ்வொரு மாவட்டத்துக்கும் திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறார்கள். அதனால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே அதிக வளர்ச்சி அடைந்த மாநிலமாக, நம்பர்1 மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுக்காக இன்னும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த தயாராக இருக்கிறார்கள். அதற்கு நீங்கள் நம் திராவிட மாடல் அரசுக்கு, வருகிற 2026 சட்டமன்ற தேர்தலிலும் தொடர்ந்து உங்களின் ஆதரவைக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த அரசும், நம் முதலமைச்சர் அவர்களும் என்றைக்கும் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள். நீங்கள் முதலமைச்சருக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, நலத்திட்ட உதவிகள் பெற்ற அத்தனை பேரையும் மீண்டும் வாழ்த்தி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தங்கப்பாண்டியன், அசோகன், மேயர் சங்கீதா இன்பம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலவாரிய துணைத் தலைவர் ராஜா அருண்மொழி, மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் என்.ஓ. சுகபுத்ரா, மாவட்ட வருவாய் அலுவலர் இராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கண்ணன், நகராட்சித் தலைவர் மாதவன் மற்றும் அரசு அதிகாரிகள் அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் 11 முடிவுற்ற திட்டப் பணிகளை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இதில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, க.செல்வம் எம்.பி., எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ., திருக்கழுக்குன்றம் ஒன்றிய குழுத் தலைவர் ஆர்.டி.அரசு, திருப்போரூர் ஒன்றிய குழுத்தலைவர் எல்.இதயவர்மன், பேரூராட்சி மன்ற தலைவர் ஜி.டி.யுவராஜ், திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




சென்னை மாமல்லபுரத்தில் நேற்று (23.09.2025) நடைபெற்ற தமிழ்நாடு அலையாத்திக் காடுகள் மாநாடு 2025 ல் வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் "தமிழ்நாட்டின் அலையாத்திப் பயணம் (Tamil Nadu's Mangrove Journey) எனும் அறிக்கையினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், திருமதி சுப்ரியா சாஹு, ஸ்ரீ நிவாஸ் ரெட்டி, ராகேஷ் குமார் டோக்ரா, பசுமைத் தமிழ்நாடு இயக்கத்தின் தலைமைத் திட்ட இயக்குநர் அன்வர்தீன், ஆ.ர.ராகுல் நாத், மற்றும் பாலகிருஷ்ண பிசுபதி, மரு, சௌமியா சுவாமிநாதன், எரிக் சோல்ஹெய்ம், திருமதி நிர்மலா ராஜா, முனைவர். ரமேஷ் ராமச்சந்திரன், கோ, சுந்தர்ராஜன் மற்றும் முனைவர், ஆ.கலையரசன் ஆகியோர் கலந்து கெண்டனர்.